IN THE COURT OF III ADDITIONAL DISTRICT COURT,
TIRUVALLUR AT POONAMALLEE

**O.S.34**/2014

Deposition of witness for the Plaintiff/PW1

Name :R.Saraswathi Date: 07.12.2022

Father's/Husband's Name:

**குறுக்கு விசாசணை தொடர்ச்சி**

1992ல் பக்தவச்சலம் இறந்த பின்பு கோவிந்தசாமி தனிப்பட்ட முறையில் வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா B-அட்டவணை சொத்து செங்கரை கிராமத்தில் உள்ளது. B-அட்டவணை சொத்து இடம் எண்கள் 33, 34, 36 முதல் 48. மொத்தம் 14 ஏக்கர் 60 சென்ட் பக்தவச்சலம் பெயரில் கிரைய பத்திரம் உள்ளது என்றால் சரிதான். அந்த கிரையம் ஏற்படும் காலத்தில் எனது தகப்பனார் ராமமூர்த்தியும் அவரது தகப்பனார் சுப்பையா நாயுடுவும் உயிருடன் இருந்தார்கள். மேற்கூறிய 14 ஏக்கர் 60 சென்ட் சொத்தில் மாந்தோப்பு உள்ளது. தற்போது அந்த சொத்தில் என்ன உள்ளது என்பது எனக்கு தெரியாது. அந்த குத்தகை வருமானத்தை பக்தவச்சலம் எடுத்து கொள்வார் என்றால் இல்லை. பி அட்டவணை சொத்தில் மேற்கூறிய 14 ஏக்கர் 60 சென்ட் தவிற மற்ற இட சொத்துக்களுக்கான 58 ஏக்கர் 25 சென்ட்க்கான கிரைய பத்திரம் கோவிந்தசாமி பெயரில் உள்ளது. மேற்கூறிய 58 ஏக்கர் 25 சென்ட் கோவிந்தசாமி பெயரில் பத்திரங்கள் ஏற்படும் போது, ராமமூர்த்தி மற்றும் சுப்பையா நாயுடு ஆகியோர் உயிருடன் இருந்தார்கள் என்றால், ஒரு சில சொத்துக்கள் வாங்கும் போது அவர்கள் உயிருடன் இருந்தார்கள். மற்ற சொத்துக்கள் வாங்கும் போது அவர்கள் உயிருடன் இல்லை. ராமமூர்த்தி மற்றும் சுப்பையா ஆகியோர் உயிருடன் இருக்கும் காலத்தில் தான், பி அட்டவணை சொத்தின் 90 சதவீத விஸ்தீரணம் கொண்ட சொத்துக்களுக்கு கிரையம் பக்தவச்சலம் மற்றும் கோவிந்த சாமி ஆகியோர் பெயரில் ஏற்பட்டது என்றால் சரியல்ல, இருக்கலாம். பக்தவச்சலம் மற்றும் கோவிந்தசாமி ஆகிய இருவரும் அவர்கள் காலத்தில் பி

அட்டவணை சொத்துக்களை அனுபவித்து வந்தார்கள் என்றும் அவர்கள் காலத்திற்கு பிறகு அவர்களின் வாரிசுதாரர்கள் தற்போது அனுபவித்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. வா.த.சா.28ன் படி சி அட்டவணை சொத்தில் ஐடம் எண்.3 சொத்தை பக்தவச்சலம் பெயரில் கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரையத்தை எனது தாத்தா சுப்பையா கிரையம் வாங்கினார். வா.த.சா.28ல் சுப்பையா கிரையம் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.த.சா.28ல் 15 மாதங்கள் கழித்து வருடத்திற்கு 12 சதவீத வட்டியுடன் கிரைய தொகையை கொடுக்க உள்ளதாக கண்டுள்ளது. 1982ல் தான் பக்தவச்சலம் வா.த.சா.28க்கு உரிய கிரைய தொகையை செலுத்தி ரசீது வாங்கினார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 07/03/1980ல் சி அட்டவணை 1வது மற்றும் 2வது ஐட ெ சாத்துக்களை கோவிந்தசாமி கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அந்த சொத்துக்களை எனது தாத்தா சுப்பையா தான் கிரையம் வாங்கினார். இந்த விவரம் அதற்கு உரிய கிரைய பத்திரமான வா.த.சா.27ல் இடம்பெற்றுள்ளதா என்றால் இல்லை. வா.த.சா.27ல் 15 மாதங்கள் கழித்து வருடத்திற்கு 12 சதவீத வட்டியுடன் கிரைய தொகையை கொடுக்க உள்ளதாக கண்டுள்ளது. 1981ல் கோவிந்தசாமி அதற்கு உரிய தொகையை செலுத்தி ரசீது வாங்கினார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. ராமமூர்த்தி, சுப்பையா மற்றும் வாதிகளின் தகப்பனாரான தாமோதரன் உயிரோடு இருந்த காலத்தில் தான் சி அட்டவணை சொத்துக்களின் கிரைய பத்திரங்கள் ஏற்பட்டது என்றால் சரிதான். சி அட்டவணை சொத்துக்களில் தான் பக்தவச்சலமும் கோவிந்தசாமியும் விஸ்வஜோதி பிரிக் இண்டஸ்டிரிஸ் என்ற பெயரில் செங்கல் சூளை நடத்திவந்தார்கள் என்றால் சரியல்ல. அது காலி இடம். சி அட்டவணை சொத்துக்களை பக்தவச்சலமும் கோவிந்தசாமியும் தான் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தார்கள் என்றும் அவர்கள் காலத்திற்கு பின்னர் அவர்களது வாரிசுதாரர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல். 7 முதல் 9 பிரதிவாதிகள் 11 ஆம் பிரதிவாதியிடமிருந்து சி அட்டவணை சொத்துக்கு வாடகை பெற்று வருவதாக பிராதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4 முதல் 6 பிரதிவாதிகள் சி அட்டவணை சொத்தி அவர்களுக்குரிய இடத்திற்கான வாடகையை 11ஆம் பிரதிவாதியிடமிருந்து பெற்று வருகிறார்கள் என்றால் 2012க்கு பின்னர் பெற்று வருகிறார்கள். பிராதிலும் எனது பதிலுரையிலும் 7 முதல் 9 பிரதிவாதிகள் 2012ஆம் வருடத்தில் இருந்து தான் 11ஆம் பிரதிவாதியிடமிருந்து வாடகை பெற்று வருகிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா

என்றால் குறிப்பாக குறிப்பிடப்படவில்லை. பொதுவாக சொல்லப்பட்டுள்ளது. 07/09/2009ல் எங்களுக்குள் பாகபிரிவினை ஏற்பட்டு அதை பதிவு செய்வதற்கு பதிவு அலுவலகத்தில் சமா்பிக்கப்பட்டது. இந்த பாகப்பிரிவினையை முன்னிருந்து செய்தது மூா்த்தி மற்றும் தினகா். மூா்த்தி சுப்பையா நாயுடுவிடம் கணக்கராக இருந்து வந்தாா். அதன்பின்னா் கோவிந்தசாமியிடமும் அவா் கணக்கராக இருந்தாா். கோவிந்தசாமியிடமிருந்து மூா்த்தி அதன்பின்னா் மனக்கசப்பின் காரணமாக பிரிந்து சென்று விட்டாா் என்றால் சரியல்ல. ஆனால் அவா் தனியாக வியாபாரம் செய்வதற்காக பிரிந்து சென்றாா்.

(பிரதிவாதிகள் தரப்பு கற்றிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடா்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)